**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**STC.No. 76/2024**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 1 |
| Name (திரு/திருமதி) | : கிருஷ்ணமூர்த்தி |
| Father's Name/ Husband's Name | : முருகன் |
| Village & Taluk | : சோ. குப்பன் |
| Calling | : கூலி |
| Age | : 25 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026**

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். பட்டியல் சாட்சி-2 அம்மனியம்மாள் எனது அம்மா ஆவார். கடந்த 2021ம் வருடம் ஒரு நாள் எனது அம்மா சோ. குப்பத்திற்கு செல்லும்போது அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வந்து என் அம்மாவை திட்டி தாக்கிவிட்டு ஓடிவிட்டார்கள். அதில் அவருக்கு கையில் காயம் ஏற்பட்டது. எதிரிகள் எனது அம்மாவை தாக்கவில்லை. அவரை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தேன். இது சம்பந்தமாக நான் சத்தியமங்கலம் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. மேற்படி புகார் மனுவில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகள் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். கடந்த 19.12.2021ம் தேதி எனது அம்மா பால் ஊற்றுவதற்காக நிலத்தில் இருந்து சோ. குப்பம் கிராமத்தில் உள்ள ரங்கசாமி வீட்டின் அருகே சென்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். அப்போது எதிரிகள் இருவரும் எனது

அம்மாவை தடியால் தாக்கி ஆபாசமாக திட்டினார்கள் என்றால் தெரியவில்லை. நானும், எதிரிகளும் தற்போது சமாதானமாகிவிட்டபடியால் அவர்களை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

SD/–B.VIDHYA,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**STC.No. 76/2024**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 2 |
| Name (திரு/திருமதி) | : அம்மனியம்மாள் |
| Father's Name/ Husband's Name | : முருகன் |
| Village & Taluk | : சோ. குப்பன் |
| Calling | : விவசாயம் |
| Age | : 40 |

**<u>Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026</u>**

<u>1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.</u>

**<u>முதல் விசாரணை :</u>**

1. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி எனது மகன் ஆவார். கடந்த 2021ம் வருடம் ஒரு நாள் நான் சோ. குப்பத்திற்கு செல்லும்போது அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வந்து என்னை திட்டி தாக்கிவிட்டு ஓடிவிட்டார்கள். அதில் எனக்கு கையில் காயம் ஏற்பட்டது. எதிரிகள் என்னை தாக்கவில்லை. காயமடைந்த நான் சத்தியமங்கலத்தில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். இது சம்பந்தமாக எனது மகன் சத்தியமங்கலம் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகள் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். கடந்த 19.12.2021ம் தேதி நான் பால் ஊற்றுவதற்காக நிலத்தில் இருந்து சோ. குப்பம் கிராமத்தில் உள்ள ரங்கசாமி வீட்டின் அருகே சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது எதிரிகள் இருவரும் என்னை

தடியால் தாக்கி ஆபாசமாக திட்டினார்கள் என்றால் தெரியவில்லை. நானும், எதிரிகளும் தற்போது சமாதானமாகிவிட்டபடியால் அவர்களை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

SD/–B.VIDHYA,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.